டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 16.11.2025 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 122 - Madurai | Online Edition

# விதைகள் வரைவு மசோதா 2025 குறித்த கருத்துகளை அரசு வரவேற்கிறது

புது தில்லி, நவ.15

விதைகள் வரைவு மசோதா 2025-ஐ மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை தயாரித்துள்ளது.

தற்போதைய விதைகள் சட்டம் 1966 மற்றும் விதைகள் (கட்டுப்பாடு) ஆணை 1983-க்கு மாற்றாக இந்த மசோதா வடிவமைக்கப்பட்டுள்ளது.

விதை மசோதா, 2025 வரைவு, சந்தையில் கிடைக்கும் விதைகள் மற்றும் நடவுப் பொருட்களின் தரத்தை ஒழுங்கு படுத்துதல், விவசாயிகள் குறைந்த விலையில் உயர்தர விதை களைப் பெறுவதை உறுதி செய்தல், போலியான, தரமற்ற விதைகளின் விற்பனையைத் தடுத்தல், விவசாயிகளை இழப்பு களிலிருந்து பாதுகாத்தல், புதுமை கண்டுபிடிப்புகளை ஊக்கு வித்தல், உலகளாவிய விதை வகைகளுக்கான அணுகலை ஊக்குவித்தல், விவசாயிகளின் உரிமைகளைப் பாதுகாத்தல், விதை விநியோக அமைப்புகளில் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புணர்வை உறுதி செய்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இம்மசோதா சிறிய குற்றங்களை குற்றமற்றதாகவும், எளிதாக வர்த்தகம் செய்வதை ஊக்குவிக்கவும், விதிமுறைகளை மீறுவதற்கு கடும் நடவடிக்கை எடுக்கவும் வகை செய்கிறது.

இம்மசோதா குறித்த கருத்துகளை சம்பந்தப்பட்டவர்கள் மற்றும் உறுப்பினர்கள் jsseeds-agri@gov.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 11.12.2025ம் தேதிக்குள் அனுப்ப வேண்டும்.

# விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத்துறை இணை இயக்குநர் ஆய்வு



புதுக்கோட்டை, நவ.15

சென்னை விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்புத் துறை இணை இயக்குநர் சாந்தி, புதுக்கோட்டை மாவட்டம், திருக்கோகர்ணத்தில் இயங்கி வரும் புதுக்கோட்டை விதைப் பரிசோதனை நிலையப் பணிகளை 14.11.25 அன்று ஆய்வு செய்தார்.

விதைப்பரிசோதனை நிலையத்தில் பெறப்படும் சான்று விதை மாதிரிகள், ஆய்வாளர் விதை மாதிரிகள் மற்றும் பணி விதை மாதிரிகள் முறைப்படி ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறதா என்பதை ஆய்வு செய்தார். விதை மாதிரிகளின் புறத்தூய்மை ஈரப்பதம் மற்றும் பிற இரக கலவன் முறைப்படி கணக்கிடப் படுகிறதா என்பதை ஆய்வு செய்தார். ஆய்விற்கு பயன்படும் உபகரணங்கள் நல்ல நிலையில் செயல்படுகின்றதா என்பதை ஆய்வு செய்தார். மேலும் விதை முளைப்புத்திறனை கணக்கிட முளைப்பு காகித முறையில் பயிர்களுக்கேற்ற முறையில் கடை பிடிக்கப்படும் பல்வேறு முளைப்பு முறைகளையும் முளைப்புத் திறனை கணக்கிடும் போது இயல்பான நாற்று, இயல்பற்ற நாற்று, கடின விதை மற்றும் முளைவிடாத உயிருள்ள விதை களின் விழுக்காடு ஆகியவை சரியான முறையில் கணக்கிடப் படுகின்றனவா என்பதையும் ஆய்வு செய்தார். மேலும் பெறப் படும் விதை மாதிரிகளை உரிய முறையில் பகுப்பாய்வு மேற்க் கொண்டு உடனுக்குடன் பகுப்பாய்வு முடிவுகளை உரியவர் களுக்கு அனுப்பி வைத்து தரமான விதைகள் விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் கிடைத்திட நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறை வழங்கினார்.

நடப்பு 2025-2026 ம் ஆண்டில் இந்நிலையத்திலிருந்து இதுவரை 2140 எண்கள் விதைமாதிரிகள் பெறப்பட்டு 2209 எண்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது என்றும் பகுப்பாய்வு

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

செய்யப்பட்ட மாதிரிகளில் 94 மாதிரிகள் தரமற்ற மாதிரிகள் என்றும் திருச்சி மண்டல விதைப்பரிசோதனை அலுவலர் வே.அறிவழகன் எடுத்துரைத்தார்.

மேலும் ஆய்வின்போது, விதைபரிசோதனை அலுவலர் வே.அறிவழகன், புதுக்கோட்டை விதைச்சான்று உதவி இயக்குநர்(பொ) இளஞ்செழியன், மூத்த வேளாண்மை அலுவலர் செ.சுமித்ராதேவி, விதைச்சான்று அலுவலர்கள் ஆமினாள், தாரிணிப்பிரியா, விதை ஆய்வாளர் முனியய்யா ஆகியோர் உடன் இருந்தனர்.

# பயிர் வகை பயிர்களில் விதை உற்பத்தி மற்றும் பயிர் மேலாண்மை பயிற்சி



கடலூர், நவ.15

கடலூர் மாவட்டம், கீரப்பாளையம் வட்டாரம், சிறுகாலூர் கிராமத்தில் 15.11.25 அன்று பயிர் வகை பயிர்களில் விதை உற்பத்தி மற்றும் பயிர் மேலாண்மை பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் க.நடராஜன் சிறப்புரையாற்றினார்.

மேலும் பயிர் வகை பயிர்களில் விதை உற்பத்தி, சாகுபடி தொழில்நுட்பங்கள், நிலம் தயாரிப்பு, விதை நேர்த்தி செய்யும் முறை, புதிய இரகங்கள், ஒருங்கிணைந்த உர நிர்வாகம், ஒருங்கிணைந்த களை நிர்வாகம், நுண்ணூட்டக் கலவையின் பயன்பாடு, மண் மற்றும் நீர் பரிசோதனை முறை மற்றும் 'வுஹியுரு பயறு ஒன்டர்' இலைவழி மூலம் தெளிக்கும் முறை பற்றிய தொழில்நுங்பங்களை தெளிவாக விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். இப்பயிற்சியில் சிறுகாலூர் கிராமம், கீரப் பாளையம் வட்டாரத்தைச் செர்ந்த 30-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தயார்நிலை உணவுகள் தயாரித்தல் பயிற்சி

கோயம்புத்தூர், நவ.15

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தயார்நிலை உணவுகள் தயாரித்தல் பயிற்சி 18.11.25 மற்றும் 19.11.25 ஆகிய இரண்டு நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை, அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக (பேருந்து நிறுத்தம் : வாயில் எண்.7, மருதமலை சாலை வழி) நடைபெறும்.

கீழ்கண்ட உணவு பொருட்களை தயாரிப்பதற்கு பயிற்சி வழங்கப்படும்.

- தோசை மிக்ஸ்
- அடை மிக்ஸ்
- டேக்ளா மிக்ஸ்
- பிசிபெலா பாத் மிக்ஸ்
- கீர் மிக்ஸ்
- ஐஸ்கீரிம் மிக்ஸ்
- தக்காளி சாதம் மிக்ஸ்
- சூப் மிக்ஸ்
- குளோப் ஜாமூன் மிக்ஸ்

ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770/- (ரூ.1500 + GST 18%) - பயிற்சி முதல் நாளன்று செலுத்த வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் 641 003. தொலைபேசி எண் : 0422 6611340, அலைபேசி எண் : 94885 18268, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

**அன்புடையீர்,**

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.





இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

தொடர்புக்கு
+91 80563 05483
+91 9344811812

# நன்றி

# நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி

கரூர், நவ.15

தமிழக அரசின் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியில் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் கரூர் மாவட்டம், மண்மங்கலம் அருகில் பண்டு தகாரன்புதூரில் அமைந்துள்ள கால்நடை பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில் 'நாட்டுக்கோழி வளர்ப்பு' குறித்த கட்டணமில்லா பயிற்சி வழங்கப்பட உள்ளது.

தமிழக அரசின் வெற்றி நிச்சயம் திட்டத்தின் கீழ், வரும் 19.11.25 (புதன்கிழமை) முதல் 25 நாட்களுக்கு கட்டணமில்லா பயிற்சி வழங்கப்பட உள்ளது. இப்பயிற்சியில் 18 வயது முதல் 35 வயது வரை உள்ள அனைவரும் கலந்து கொள்ளலாம்.

இப்பயிற்சியில் சேர கல்வித் தகுதியான பட்டப்படிப்பு, பட்டையப்படிப்பு, ஐடிஐ மற்றும் 10-ம் வகுப்பு முடித்தவர்கள் விண்ணப்பிக்கலாம். இப்பயிற்சியானது ஒரு நாளைக்கு எட்டு மணி நேரம் நடைபெறும். தினந்தோறும் பயோமெட்ரிக் முறையில் வருகைபதிவு எடுக்கப்படும். அதாவது தினமும் பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கும் போதும் மற்றும் பயிற்சி முடியும் போதும் வருகைப்பதிவு பயோமெட்ரிக் சாதனம் மூலம் பதிவு செய்யப்படும். 25 நாட்களும் பயிற்சியில் பங்கேற்க வேண்டும்.




பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர், முன்பதிவை www.tnskill.gov.in என்ற இணையதளத்தில் (https://candidate.tnskill.tn.gov.in/skillwallet/course/1481மற்றும் https://candidate.tnskill.tn.gov.in/TnsdcNMFSTP/login) பதிவு செய்ய வேண்டும்.

மேலும் இது குறித்து விவரங்களுக்கு நேரடியாகவோ அல்லது 04324 294335 மற்றும் 73390 57073 ஆகிய தொலை பேசி எண்களில் (அலுவலக வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை) தொடர்பு கொள்ளலாம்.

# பொன்னமராவதி வட்டாரத்தில் உழவர் திரள் பரவலாக்கம் நிகழ்ச்சி

புதுக்கோட்டை, நவ.15

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டாரத்தில் வேளாண்மை துறையின் மூலம் செயல்படுத்தப்படும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மாநில விரிவாக்க உறுதுணை சீரமைப்பு திட்டங்களின் கீழ் வாழக்குறிச்சி கிராமத்தில் உழவர் திரள் பரவலாக்கம் நிகழ்ச்சி வேளாண்மை உதவி இயக்குனர் ரஹ்மத்



நிஷா பேகம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ராம்ஜெகதீஷ், பேரா சிரியர், தேசிய பயறு வகை ஆராய்ச்சி நிலையம், வம்பன். மகேந்திரேன், (வேளாண் வணிகம்) ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.



இந்நிகழ்ச்சியில் வேளாண்மை உதவி இயக்குனர் ரஹ்மத் நிஷா பேகம் வேளாண்மை துறையின் மூலம் வழங்கும் மானியத் திட்டங்கள் குறித்தும், நுண்ணீர் பாசனத் திட்டங்கள் குறித்தும் விளக்கமாக எடுத்துரைத்தார். கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சி திட்டங்களின் தனிப்பட்ட விவசாயிகளின் தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றுதல், வரப்புகளில் பயறு வகை பயிர்களை சாகுபடி செய்ய ஊக்குவித்தல், மண்வளத்தை மேம்படுத்த திரவ உயிர் உரங்களை வழங்குதல், விசை தெளிப்பான ஆகியவை மானிய விலையில் வழங்கப்படுகிறது. இவற்றை அனைத்து விவசாயிகளும் பெற்று பயன் பெறுமாறு கேட்டுக் கொண்டார். தற்போது நடைபெற்று வருகின்ற விவசாயிகளின் நில உடைமைகளை பதிவு செய்யும் (Framer Registry) பணியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். பாரத பிரதம மந்திரியின் விவசாயிகளுக்கான கௌரவ நிதி உதவி தொகை திட்டத்தில் தொடர்ந்து பயன்பெற தகுதியுடைய விவசாயிகள் நில உடைமை களை பதிவேற்றம் செய்து தனித்துவ அடையாள எண் பெறப்பட வேண்டும். 21வது தவணைத் தொகை வரவு வைக்கப்பட உள்ள நிலையில் உடனடியாக நில உடைமை பதிவு செய்யாத விவசாயிகள் ஆதார் அட்டை, கணினி சிட்டா, ஆதார் உடன் இணைக்கப்பட்ட அலைப்பேசியுடன் பொன்னமராவதி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம் மற்றும் பொது இ-சேவை மையங்களையும் தொடர்பு கொண்டு உடனடியாக பதிவேற்றம் செய்து பயன் பெறுமாறு விவசாயிகளிடம் விரிவாக எடுத்துரைத்தார்.

பின்னர், ராம்ஜெகதீஷ், பேராசிரியர், தேசிய பயறு வகை ஆராய்ச்சி நிலையம், வம்பன். அவர்கள் தற்போது சம்பா பருவத்தில் காணப்படும் நெல் பயிரில் காணப்படும் தண்டு துளைப்பான், இலை சுருட்டுப் புழு ஆகியவற்றை கட்டுப்படுத்திட பயிர் பாதுகாப்பு மேலாண்மை முறைகள் குறித்து எடுத்துரைத்தார். தண்டு துளைப் பான் தாக்குதலில் இளம்பயிர் நடுகுருத்து வாடி காய்ந்துவிடும்.

நெல்மணிகள் பால் பிடிக்கமால் வெண் பதராக காணப்படும், இலைசுருட்டு புழுக்கள் நெற்பயிரின் இலைகளை ஒன்றிணைத்து பச்சையத்தை சுரண்டி வெண்மையாக காணப்படும். தண்டுத் துளைப்பான் தாக்குதலை கட்டுப்படுத்திட ஏக்கருக்கு புளுபெண்டியமைடு

20% WG 50 கிராம் (அல்லது) கார்டாப் ஹைட்ரோ குளோரைடு 50% SP 400 கிராம் அளவிலும், நெல் இலைச்சுருட்டுப் புழுவைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு புளுபெண்டியமைடு 20% WG 50 கிராம் (அல்லது) புளுபெண்டியமைடு W/W SCV 20 மிலி 20% (அல்லது) கார்டாப் ஹைட்ரோகுளோரடு 50% SP 400 கிராம் (அல்லது) குளோரான்ட்ரனிலிபுரோல் 18.5% SC 60 மிலி என்ற அளவிலும், வயல்களில் இலை வழியாகத் தெளித்து பயிர் வளர்ச்சியை மேம்படுத்திடலாம் எனவும் தெரிவித்தார்.

மேலும், வயல் வரப்புகளை சுத்தமாக வைத்துக் கொள்ளவும், பசுந்தாள் உரப்பயிர்கள் பயன்படுத்தவும், யூரியா, டிஏபி, போன்ற உரங்களை பரிந்துரைக்கப்பட்ட அளவில் மட்டுமே பயன்படுத்தவும், நெல் சாகுபடியை தொடர்ச்சியாக மேற்கொள்வதை தவிர்த்து பயிர்சுழற்சி மேற்கொள்ள வேண்டும் என விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினார். எனவே, விவசாயிகள் தங்கள் வயல்களில் பூச்சி நோய் தாக்குதல் அறிகுறிகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து மேற்கண்ட தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என ஆலோசனை வழங்கினார்.

பின்னர், மகேந்திரன், உதவி வேளாண்மை அலுவலர், அவர்களால் வேளாண் வணிகம் மற்றும் விற்பனைத் துறையின் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் திட்டங்கள் குறித்தும், விவசாயிகள் நேரடியாக சந்தைப்படுத்துவதற்கு தேவையான வழிமுறைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். இதனைத் தொடர்ந்து, வேணி, வேளாண்மை அலுவலர், வரப்பில் பயறு வகை பயிர்கள் சாகுபடி செய்வதன் முக்கியத்துவம், நெல்லுக்கு பின் பயறு சாகுபடி , துவரை பரப்பு விரிவாக்க திட்டம் ஆகியவை குறித்து விளக்கமாக எடுத்துரைத்தார்.

பின்னர், முருகன், துணை வேளாண்மை அலுவலர், மண் வளத்தை பாதுகாக்கும் முறைகள் மற்றும் விதைநேர்த்தி, நெற் பயிரிக்கு தேவையான ஊட்டச்சத்து மேலாண்மை முறைகள் குறித்தும் எடுத்துரைத்தார். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை காவ்யா, உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் உதவி தொழில் நுட்ப மேலாளர் பிரசாத் ஆகியோர் செய்திருந்தனர். இந்நிகழ்ச்சியில் 100 விவசாயிகள் பங்கு கொண்டு அங்கக வேளாண்மை, மண் வளம், மண்புழு உரம், உயிர் உரங்கள் போன்ற தொழில் நுட்பங்கள் குறித்த பதாகைகளை கையில் ஏந்தி விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை முன்னோடி விவசாயி அழகு, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் முறையே பிரசாத் மற்றும் நவீன்குமார் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

# லாபகரமான ஆடு மாடு வளர்ப்பு மற்றும் கோழி வளர்ப்பு குறித்த பயிற்சி நடைபெற்றது

ராணிப்பேட்டை, நவ.15

ராணிப்பேட்டை மாவட்டம், திமிரி அடுத்த துர்கம் கிராமத்தில் உள்ள விவசாயிகளுக்கு இலாபகரமான கால்நடை மற்றும் கோழி வளர்ப்பு பண்ணையம் குறித்த பயிற்சி நடைபெற்றது.

பயிற்சியில் வேளாண்மை உதவி இயக்குனர் ராமன் தலைமை தாங்கி துறை சார்ந்த திட்டங்களை எடுத்துரைத்தார் மற்றும் விவசாயிகளிடமிருந்து எழுந்த கேள்விகளுக்கும் விளக்கம் அளித்தார். இதனை தொடர்ந்து பயிற்சியின் சிறப்பு அழைப் பாளராக கால்நடை மருத்துவர்கள் இசைவாணி கால்நடை வளர்ப்பு குறித்தும் தீவனம் மேலாண்மை குறித்தும் கால்நடை களுக்கு மழை நாட்களில் வரும் நோய்கள் கட்டுபடுத்தும் முறைகள் பற்றி விளக்கமாக எடுத்துக் கூறினார். மேம்படுத்து வதற்க்கும் இயற்கை வளங்கள் பற்றி எடுத்துக் கூறினார்.

இதனை தொடர்ந்து வேளாண்மை அலுவலர் கனகராசு, ஒருங்கிணைந்த பண்ணையம் மூலம் கால்நடை வளர்ப்பதின் மூலம் இயற்கை வளங்கள் பாதுகாத்தல் இதில் ஒருங்கிணைந்த முறையில் விவசாயம் செய்யுமாறு கூறினார். இயற்கை உரங்கள் தயாரித்து பயன்படுத்துமாறு கூறினார் மற்றும் இயற்கை உரங்கள் பயன்படுத்துவதின் மூலம் மண் வளம் பாதுகாக்கப்படுகிறது. இராசாயண உரங்களை குறைவாக பயன்படுத்துமாறு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

இதனை தொடர்ந்து உதவி வேளாண் அலுவலர் டில்லி ராஜா, பயிர் காப்பீடு திட்டம் குறித்து விளக்கினார். இதனைத் தொடர்ந்து அட்மா திட்ட அலுவலர் கோபாலகிருஷ்ணன் உயிர் உரங்களின் பயன்கள் பற்றி கூறினார். இதில் அட்மா திட்ட அலுவலர் தாமோ தரன் மற்றும் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் துர்கம் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர். இறுதியாக பயிற்சி முடிந்தவுடன் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.



**Rithvik Pipe**

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**—தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha BHEL

**Office**
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# பஞ்சகவ்யா தயாரிப்பது எப்படி?



இன்றைய கால கட்டத்தில் இயற்கை விவசாயத்தை பின்பற்றக்கூடியவர்கள் நாளுக்கு நாளாக அதிகரித்து வரும் நிலையில் இயற்கை விவசாயத்தில் பயிர் வளர்ச்சி ஊக்கியாக பஞ்சகவ்யா பயன் படுத்தப்பட்டு வருகிறது. இதை விவசாயிகளே தாங்களே நேரடியாக எளிய முறையில் தயாரிக்க முடியும்.

அந்த வகையில் எப்படி தயாரிப்பது குறித்து விரிவாக பார்ப்போம்.

**பஞ்ச கவ்யா கரைசல் தயாரிக்க என்ன என்ன பொருட்கள் தேவை?**

| | |
|---|---|
| பசுமாட்டு சாணம் | = 3 கிலோ |
| கோமியம் | = 3 லிட்டர் |
| பால் | = 2 லிட்டர் |
| தயிர் | = 2 லிட்டர் |
| நாட்டு சர்க்கரை | = 2 கிலோ |
| வாழை பழம் | = 12 எண்ணம் |
| இளநீர் | = 2 லிட்டர் |
| ஈஸ்ட் | = 2 லிட்டர் |

கடலை பிண்ணாக்கு = 1 கிலோ.

**தயாரிப்பு முறை**

கடலைப்பிண்ணாக்கை ஒரு மணி நேரம் நீரில் ஊற வைத்துப் பிறகு எல்லாப் பொருட்களையும் மண்பாணை அல்லது பிளாஷ்டிக் வாளியில் கலந்து நிழலில் வைக்கவும். தூசி தும்பு படாமல் இருக்க மெல்லிய துணியால் வேடு (வண்டு) கட்டி வைக்கலாம். தினமும் இந்த கலவையை கலக்க வேண்டும். இதனால் மீத்தேன் வாயு வெளியேறி நன்மை செய்ய கூடிய நுண்ணுயிர்கள் (BENFICIAL MICROBS) பெருகும்.

7 நாட்களில் பஞ்ச காவியா தயாராகி விடும். ஏறத்தாழ இதன்மூலமாக 25 முதல் 30 லிட்டர் வரை பஞ்ச கவ்யா கிடைக்கும்.

**பயன்படுத்தும் முறை?**

இதை எல்லாவிதமான பயிர்களுக்கும் தெளிக்க வல்ல வளர்ச்சி ஊக்கியாகும். இதனால் மண்வளம் கூடுவதுடன் அதிகமாக பூக்களும் காய்களும் உற்பத்தியாவதுடன் மட்டு மல்லாது காய்கனிகள் மிகவும் சுவையாகவும் மணத்துடன் இருக்கும். 10 லிட்டர் நீருக்கு 300 மி.லி என்றளவில் கலந்து தெளிக்கலாம். ஒரு முறை தயாரித்த பஞ்ச கவ்யாவை 6 மாத காலம் வரை பயன்படுத்தலாம். 15 நாட்களுக்கு ஒரு முறை தெளிக்கலாம்.




**பஞ்ச காவியா தெளிக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை?**

1) கீரைக்கு மட்டும் அளவை குறைக்க வேண்டும். 10 லிட்டருக்கு 100 மி.லி என்ற அளவில் பயன்படுத்த வேண்டும்.

2) நெல் பயிருக்கு மட்டும் கதிர்கள் வந்தவுடன் தெளிக்க க் கூடாது. அப்படி செய்தால் நெல்மணிகளின் தோல் கடினமாகி விடும்.

என்ன? எளிய முறையில பஞ்ச காவ்யா தயாரிக்கலாமே.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# ஆட்கள் பற்றாக்குறைக்குத் தீர்வு :

# வசந்தம் சாரதி i 06 பவர் வீடர்-ஓர் விவசாயப் புரட்சி!



நமது நாட்டின் விவசாயத்தில் இன்று இருக்கும் மிகப்பெரிய சவால் ஆட்கள் பற்றாக்குறை தான். கிராமப்புற இளைஞர்கள் நகரங்களை நோக்கிச் செல்வதாலும், கூலி உயர்வினாலும் விவசாயப் பணிகள் குறித்த நேரத்தில் முடிவடைவதில்லை. இந்த இக்கட்டான சூழ் நிலையில், விவசாயிகளின் உழைப்பையும், நேரத்தையும், பணத் தையும் மிச்சப்படுத்த, வசந்தம் அக்ரி டெக் ஒரு சிறந்த தீர்வை வழங்குகிறது. அதுதான் சாரதி i 06 பவர் வீடர் (Sarathy i 06 Power Weeder). இந்த பல்துறை இயந்திரம், விவசாயிகளின் கைகளில் இருக்கும் ஒரு நவீன ஆயுதம்!

**சிறப்பம்சங்கள் மற்றும் பயன்கள்**

**சக்திவாய்ந்த எஞ்சின் :** இது 5.4 hp (4.01 kW) சக்தியை 3600 rpm-ல் வழங்குகிறது.

**பல்வேறு பயன்பாடுகள் :** சாரதி i 06 வெறும் களைவெட்டும் கருவி மட்டுமல்ல. இது களைவெட்டுதல் (weeding), உழுதல் (ploughing), வாய்க்கால் போடுதல் (canal), வரப்பு அமைத்தல் (bund forming), வட்டப்பாத்தி அமைத்தல் (contour bunds), மேட்டுப்பாத்தி அமைத்தல் (raised beds) போன்ற அத்தனை வேலைகளையும் செய்ய முடியும்.

**அட்டாச்மென்ட்கள் :** இதில் 20 விதமான அட்டாச்மென்ட்களைப் (Attachments) பயன்படுத்தி, தேவைக்கேற்ப பல்வேறு வேலை களைச் செய்ய முடியும். பி.டி.ஓ ஷாஃப்ட்டுடனும் (PTO Shaft) இதனை பயன்படுத்த முடியும்.

**வேகக் கட்டுப்பாடு :** இதில் – 1, 0, 1, 2 என 4 கியர்கள் உள்ளன. இதன் டிரான்ஸ்மி ஷன் முறை கியர்கள் மூலம் செய்யப்படுகிறது.

**அரசு மானிய விவரங்கள் :** தமிழ்நாடு முழுவதும் வசந்தம் அக்ரி டெக் மூலமாக இந்த பவர் வீடர் மானியம் (Subsidy) மூலம் கிடைக்கிறது.

இந்த இயந்திரத்தின் மொத்த விலை சுமார் ரூ.75,000/- ஆகும் (5% GST சேர்த்து). விவசாயிகளின் வகையைப் பொறுத்து மானியத்தின் அளவு மாறுபடுகிறது.

பொது விவசாயிகளுக்கு ரூ.45,000/-க்கு கிடைக்கும். பெண்கள் மற்றும் SC / ST விவசாயிகளுக்கு ரூ.37,500/-க்கு கிடைக்கும்.

சிறு குறு விவசாயிகளுக்கு ரூ.30,000/-க்கு கிடைக்கும். சிறு குறு & SC / ST விவசாயிகளுக்கு ரூ.22,500/-க்கு கிடைக்கும்.

மேலும் விவரங்களுக்கு, வசந்தம் அக்ரி டெக்-யை தொடர்பு கொள்ளலாம். தொடர்பு எண் : +91 75400 66652.



# நவீன வேளாண்மையில் காளான் வளர்ப்பில் வேளாண் பட்டதாரி



திருப்பூர், நவ.15

வீட்டில் இருந்தபடியே ஒரு லாபகரமான தொழில் செய்ய வேண்டுமென்றால் காளான் வளர்ப்பு நல்ல சாய்ஸ். இதற்கு ஓர் உதாரணமாக விளங்குகிறார் கன்னியாகுமரி மாவட்டம், திங்கள் நகருக்கு அருகே உள்ள இரணியல் கோணத்தைச் சார்ந்த ஜெஸ்மி. கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் பிஎஸ்சி அக்ரி பயின்ற இவர் காளான் வளர்ப்பைத் தொடங்கி தற்போது நல்ல வருமானம் பார்த்து வரும் ஜெஸ்மியைச் சந்தித்துப் பேசினோம்.

'பிஎஸ்சி அக்ரி படிக்கும் போது காளான் வளர்ப்பு குறித்த பாடத் திட்டமும் இருந்தது. அதைப் படிக்கும் போதே காளான் வளர்க்கலாம் என முடிவு செய்தேன். படிப்பு முடிந்த பிறகு காளான் வளர்ப்பில் இறங்கினேன். இதற்காக கடந்த 2022ம் ஆண்டு தோட்டக்கலைத் துறையின் மூலம் ரூ.2 லட்சம் மானியம் பெற்றேன். இந்தப் பணத்தில் தான், 600 சதுர அடியில் ஷெட் அமைத்தேன்.

மேலும், காளான் விதை உற்பத்தி செய்வதற்கான உபகரணங்களையும் வாங்கினேன். காளான் உற்பத்திக்கான தாய் விதையை கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலேயே வாங்கினேன். தாய் காளான் விதைகளுடன் அவித்த மக்காச் சோளத்தைக் கலந்து விதைகளை உற்பத்தி செய்து வருகிறேன். தற்போது நான் 300 பெட் அமைத்து காளான் வளர்க்கிறேன். இதற்கு தரமான வைக்கோல் தேவைப்படுகிறது. நன்றாக முதிர்ந்த வைக்கோலில் காளதன் விதைகளை வைத்து பெட் செய்யும் போது, ஒரு பெட்டில் 400 கிராம் முதல் 750 கிராம் வரை காளான் கிடைக்கும்.

பாலித்தீன் கவரில் வைக்கோலை நனைத்து வைத்து, அதன் மீது காளான் விதை, அதன்மீது வைக்கோல் என 3 அடுக்கு விதைகளும், 4 அடுக்கு வைக்கோலும் வைத்து பெட் தயாரிக்க

வேண்டும். சரியாக 21-வது நாளில் காளான் வளர்ச்சி அடைந்து அறுவடைக்கு தயாராகி விடும். அதன் பிறகு 31-வது நாள் இரண்டாவது அறுவடை, 41-வது நாள் 3-வது அறுவடை என ஒரு பெட்டில் 3 முறை அறுவடை செய்யலாம்.

21-வது நாளில் ஒரு பெட்டில் இருந்து 350 கிராம் காளான் கிடைக்கும். இரண்டாவது முறை 100 கிராம், 3வது முறை 50 கிராம் கிடைக்கும். சீதோஷ்ண நிலை சரியாக இருக்கும் பட்சத்தில் காளானின் உற்பத்தி அதிகரித்து ஒரு பெட்டில் இருந்து 750 கிராம் காளான் கிடைக்கும். ஒரு பெட் 3 கிலோ முதல் 3.100 கிலோ கிராம் வரை எடை இருக்கும். காளான் அறுவடை செய்து முடித்த பிறகு அந்த பெட் 1 கிலோ எடையாக குறைந்துவிடும்.

300 பெட் அமைப்பதற்கு விதை, வைக்கோல் செலவு என மொத்தம் ரூ.10 ஆயிரம் வரை செலவு ஆகும். நான் உற்பத்தி செய்யும் காளான்களை சூப்பர் மார்க்கெட்டில் பாக்கெட் போட்டு கொடுத்து விடுவேன். வீட்டில் வந்து வாங்கினாலும் விலைக்கு கொடுப்பேன்.

200 கிராம் காளான் ரூ.65க்கு விற்பனை செய்கிறேன். 300 பெட் மூலம் ரூ.36 ஆயிரத்திற்கு விற்பனை செய்யும் அளவிற்கு காளான் கிடைக்கிறது. சில நேரங்களில் வருமானம் கூடும், சில நேரங்களில் சிறிது குறையும். காளான் விதைகளையும் ஒரு கிலோ ரூ.165 என விற்கிறேன்.

இயற்கை அங்காடிகளில் அதை விற்பனைக்காக கொடுக்கிறேன். காளான் வளர்க்க விரும்புகிறவர்கள் எளிதாக அங்கு வாங்கிக் கொள்ளலாம்.

எனது கணவர் நுகர்பொருள் வாணிப கழகத்தில் வேலை பார்க்கிறார். விடுமுறை நாட்கள் மற்றும் ஓய்வு கிடைக்கும் போது எனக்கு அவர் உதவியாக இருப்பார். குமரி மாவட்டத்தில் காளான் தேவை அதிகரித்தபடி உள்ளது. ஆனால் உற்பத்தி என்பது குறைவாகவே உள்ளது. இதனால் இங்குள்ளவர்கள் தாராளமாக காளான் வளர்ப்பில் ஈடுபடலாம். காளான் வளர்க்க விரும்புகிறவர்களுக்கு நான் பயிற்சி அளிக்கிறேன். பள்ளி, கல்லூரி மாணவர்கள் படிப்பு தொடர்பாக இங்கு பயிற்சி மேற்கொள்ள வருகிறார்கள். அவர்களிடம் கட்டணம் வாங்காமல் பயிற்சி அளிக்கிறேன்' என்கிறார்.

தகவல் : **வீ.யுவராஜ் தட்சிணாமூர்த்தி ஜெஸ்மி, வேளாண்மை பொறியாளர், உடுமலைப்பேட்டை. 96007 63452.**

# நங்கவள்ளி வட்டாரத்தில் அட்மா திட்ட விவசாயிகள் ஆலோசனைக்குழு கூட்டம்

சேலம், நவ.15

சேலம் மாவட்டம், நங்கவள்ளி வட்டாரத்தில் வேளாண்மைத் துறையின் அட்மா திட்ட ஆலோசனைக்குழு கூட்டம் நங்கவள்ளி வேளாண்மை விரிவாக்க மையத்தில் நடைபெற்றது. வட்டார ஆலோசனைக் கூட்டத்திற்கு அட்மா திட்டத் தலைவர் ரவிச்சந்திரன் தலைமை வகித்தார். நங்கவள்ளி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வெ.விமலா கூட்டத்தை தொடக்கி வைத்தார்.


வட்டார விவசாயிகள் ஆலோசனைக் குழு உறுப்பினர்கள், வட்டார தொழில்நுட்ப குழு அலுவலர்கள் மற்றும் இதர விவசாயிகள் பங்கேற்றனர். அட்மா திட்டத்தின் செயல்திட்ட நிதி இலக்குகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் ப.சுகிர்தா விளக்கமாக கூறினார் மற்றும் இலக்குகளை சாதனை புரிய தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டது.




தோட்டக்களை அலுவலர், கால்நடை மருத்துவர், வேளாண்மை அலுவலர் (வனத்துறை) மற்றும் வேளாண்மை அலுவலர் (வேளாண்மைத்துறை) ஆகியோர் துறை சார்ந்த மானியத் திட்டங்களை விளக்கமாக எடுத்துக்கூறினர்.

இக்கூட்டத்தில் கலந்துக் கொண்ட உறுப்பினர்களுக்கு போக்குவரத்து செலவினத்தொகை, மரக்கன்றுகள் மற்றும் சோளம் விதைகள் வழங்கப்பட்டது. இக்கூட்டத்திற்கான ஏற்பாடு களை அட்மா திட்ட அலுவலர்கள் செய்திருந்தனர்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# யூரியாவுக்கு பதிலாக நானோ யூரியா பயன்படுத்தினால் விளைச்சல் அதிகரிக்கும்

## விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரி அறிவுறுத்தல்

திருச்சி, நவ.15

திருச்சிராப்பள்ளி மாவட்டவேளாண்மை இணை இயக்குநர் பூ.வசந்தா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது :

பெரும்பாலான விவசாயிகள் பயிர்களில் நல்ல விளைச்சலை பெற ரசாயன உரங்களையே பயன்படுத்துகின்றனர். அதிலும் யூரியாவின் பயன்பாடு ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. யூரியா விளைச்சலை அதிகரிக்கும் என்றாலும் விரைவாக அது நிலத்தை கெடுக்கும் என்பது மறுக்கப்படாத உண்மை.

யூரியா போன்ற ரசாயன உரங்கள் தாராளமாக பயன்படுத்தப் பட்டாலும் கூட பயிர்கள் எப்போதும் தங்களுக்கு தேவையான ஊட்டச்சத்துக்களைப் பெறுவதில்லை. சாதாரணமாகவே யூரியாவை மண்ணில் அடியுரமாகவோ, மேல் உரமாகவே இடும் போது 30-35 சதவீதம் சத்து மட்டுமே பயிருக்கு கிடைக்கின்றது. மீதமுள்ள 65-70 சதவீதம் சத்து நிலம் மற்றும் நிலத்தடி நீரை மாசுபடுத்துவதோடு, ஆவியாகி வளிமண்டலத்தில் கலந்து வீணாகிறது. இந்த 65-70 சதவீதம் சத்து வீணாவதை தடுக்கவும், நிலம் கெடாமலிருக்கவும் தான் நல்ல உரமாக நானோ யூரியா கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நானோ யூரியா தாவர ஊட்டச்சத்தை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டுஉருவாக்கப்பட்ட உலகின் முதல் திரவ உரமாகும்.

இது பயிர்களுக்குத் தேவையான நைட்ரஜனை திறம்பட வழங்குகிறது. திட யூரியாவைவிட மிகக்குறைந்த அளவே தேவைப்படுகிறது. பயிர்களில் ஊட்டச்சத்து உறிஞ்சுதலை மேம்படுத்துகிறது. சக்தி சேமிப்பு மற்றும் குறைந்த கார்பன் டை ஆக்சைடு வெளியேற்றத்திற்கு வழிவகுக்கிறது. சுற்றுச்சூழல் மாசுபாட்டை குறைக்கிறது.

மண்ணில் இட்ட யூரியாவிலிருந்து தழைச்சத்துக்கள் இலைகளுக்குள் இழுக்கப்பட சுமார் 8-9 மணி நேரம் ஆகிறது. ஆனால், நானோ யூரியா இலைகளின் மீது தெளித்த ஒரு மணி நேரத்திற்குள் 80-90 சதவீதம் சத்துக்கள் இலைகளில் உறிஞ்சப்படுகிறது எனவும் நானோ யூரியாவைப் பயன்படுத்தினால் 10-20 சதவீதம் விளைச்சல் அதிகரிப்பதாகவும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

எப்போதும் போல அடியுரமாக யூரியா அல்லது கலப்பு உரங்களை பயன்படுத்திவிட்டு மேலுரமாக நானோ யூரியாவை பயன்படுத்திக் கொள்ளலாம். இதனால் 50 சதவீதம் யூரியா பயன்பாட்டை குறைக்கலாம். மேலும் 20 சதவீதம் விளைச்சல் அதிகரிக்கவும் வாய்ப்புள்ளது. 500 மிலி கொண்ட ஒரு பாட்டில் நானோ யூரியா விலை ரூ.240.

நானோ யூரியா தற்போது அனைத்து கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனை நிலையங்களில் கிடைக்கிறது. ஒரு ஏக்கருக்கு 125 லிட்டர் தண்ணீரில் 250 மிலி நானோ யூரியவை கலந்து டிரோன் மூலம் 5 நிமிடங்களில் தெளிக்கலாம். நானோ யூரியாவை 2 முறை முதலில் நெல் நடவு செய்த 25 நாட்களில் ஒரு முறையும், பின்பு 25 நாட்கள் கழித்து 2வது முறையும் தெளிக்கலாம்.

நானோ யூரியாவை தண்ணீரில் கலந்தவுடன் தெளிக்க வேண்டும். ஒரு மூட்டை சாதாரண யூரியாவுக்கு பதிலாக ஒரு பாட்டில் நானோ யூரியா பயன்படுத்துவதால் பல நன்மைகள் உள்ளன. எனவே, வேளாண்மை பெருமக்கள் நானோ யூரியா பயன்படுத்துவதை அதிகரிக்க வேண்டும். யூரியா மண்ணில் இடுவதைக் குறைக்க வேண்டும். தீவன பயிர்களுக்கு அதிகளவில் யூரியா பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும்.

கூடுதலாக நானோ யூரியாவை பயன்படுத்தும் விவசாயிகளுக்கு ரூ.2 லட்சம் விபத்து காப்பீடு - இப்கோ நிறுவனம் இலவச விபத்துக் காப்பீடாக ரூ.2 லட்சம் வரை வழங்குவதாக அறிவித்துள்ளது.

நானோ யூரியா வாங்கிய 31வது நாளிலிருந்து 12 மாதத்திற்குள் விபத்துக் காப்பீடு பெறலாம். காப்பீட்டிற்கான பிரீமியத்தை இப்கோ நிறுவனமே செலுத்துகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மாநில விதைச்சான்று இணை இயக்குநர் விதைப்பண்ணை மற்றும் உயிர்மப்பண்ணைகள் ஆய்வு



புதுக்கோட்டை, நவ.15

புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள விதைப் பண்ணை மற்றும் உயிர்மப் பண்ணைகளை சென்னை விதைச்சான்று இணை இயக்குநர் சாந்தி வெள்ளிக்கிழமை (14.11.25) அன்று ஆய்வு மேற்கொண்டார்.

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் வட்டாரம், அண்ணா பண்ணையில் அமைக்கப்பட்டுள்ள மு 1812 நிலக்கடலை இரகம் (6.35-ஏக்கர்), மேம்படுத்தப்பட்ட வெள்ளை பொன்னி (4-ஏக்கர்) நெல் இரகம் மற்றும் கோ9 (2-ஏக்கர்) துவரை-விதைப் பண்ணைகளை விதைச்சான்று இணை இயக்குநர் சாந்தி ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின் போது பயிரிடப்பட்டுள்ள பயிர் களைப் பார்வையிட்டு விதைத்தரத்தினை உறுதிப்படுத்துவ தற்கான ஆலோசனை வழங்கினார். குடுமியான்மலை அரசு விதைப்பண்ணைக்குட்பட்ட விதைச்சுத்திகரிப்பு நிலையத்தில், ஏ.எஸ்.டி21 நெல் இரகத்தின் விதைச்சுத்திகரிப்பு பணியினை ஆய்வு மேற்கொண்டு மிதவை பரிசோதனை மேற்கொண்டார்.

பின்னர், திருவரங்குளம் வட்டாரம், சகுபர் நிாவால் பராமரிக்கப் பட்டு வரும் தமிழ்நாடு உயிமச்சான்றளிப்புத் துறையினால் சான்றளிக்கப்பட்டுள்ள உயிர்மப்பண்ணையை, விதைச்சான்று இணை இயக்குநர் ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின் போது பயிரிடப்பட்டுள்ள பயிர்களைப் பார்வையிட்டு தரத்தினை உறுதிப் படுத்துவதற்கான ஆலோசனை வழங்கியதுடன், மேலும் இவ் வட்டாரத்தில் உள்ள விவசாயிகளை இயற்கை வேளாண்மை மேற்கொள்வதற்காக ஊக்குவிக்கும் பொருட்டு அவர்களுக்கான ஊக்கத்தொகை மானியம் மத்திய, மாநில அரசுகளின் திட்டங் களையும் எடுத்துரைத்தார்.

மேலும் புதுக்கோட்டை மாவட்ட விதைப்பரிசோதனை நிலை யத்தில் முளைப்புத்திறன், ஈரப்பதம், புறத்தூய்மை மற்றும் பிற இரக கலவன் ஆகிய உட்காரணிகளை விதைப்பரிசோதனை யின் போது சரியான முறையில் கணக்கிடப்படுகிறதா என்பதை

ஆய்வு மேற்கொண்டு தரமான விதைகள் விவசாயிகளுக்கு கிடைத்திட உரிய நேரத்தில் விதைப்பரிசோதனை முடிவுகள் வழங்கிட விதைப்பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் களுக்கு அறிவுறுத்தப்பட்டது. ஆய்வின் போது திருச்சி விதைப் பரிசோதனை அலுவலர் அறிவழகன், அன்னவாசல் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மதியழகன், புதுக்கோட்டை மாவட்ட விதைச்சான்று உதவி இயக்குநர்(பொ) இளஞ்செழியன், விதைப்பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர், விதைச்சான்று அலுவலர்கள், விதை ஆய்வாளர் மற்றும் பண்ணை மேலாளர்கள் உடன் இருந்தனர்.



# கார்த்திகை பட்ட நிலக்கடலை சாகுபடி

கார்த்திகை மாதத்தில் விதைப்பரிசோதனை செய்து விதையின் தரத்தை அறிந்து விதைப்பு செய்வது அதிக மகசூலுக்கு வாய்ப்பை அளிக்கிறது. இந்தப் பட்டத்தில் சாகுபடி செய்யும்போது போதிய மழை, சரியான தட்பவெப்பநிலை சாதகமாக இருப்பதால், அதிக மகசூல் பெறப்படுகிறது. நிலக்கடலை உற்பத்தியில் அதிக மகசூலை பெற அந்த பகுதிகளுக்கு ஏற்ற, குறைந்த வயதுடைய உயர் விளைச்சல் ரகங்களை தேர்வு செய்து, அந்த ரகங்களின் தரமான விதைகளைப் பயன்படுத்துவது முக்கியமான அடிப்படை தேவைகளில் ஒன்றாகும். அதிகபட்ச இனத்தூய்மையும், மண், தூசி, பதர் போன்றவை நீக்கப்பட்டு, அதிக புறத்தூய்மையும், பூச்சி நோய் தாக்குதலின்றி நல்ல முளைப்புத்திறனுடன் கூடிய வேகமான வளர்ச்சியை தரவல்ல விதைகளே தரமான விதைகள் ஆகும்.

நிலக்கடலையைப் பொருத்தவரை பயன்படுத்தப்படும் விதைகளுக்கு குறைந்தபட்சம் 70 சதவிகிதம் முளைப்புத்திறனும், 96 சதவீதம் புறத்தூய்மையும் அவசியமானது. பிற இனப்பயிர் விதைகள், பிற ரக விதைகள் கலப்பின்றி இருத்தல் வேண்டும். மேலும் விதையின் அதிகபட்ச ஈரப்பதம் 9 சதவீதம் இருக்க வேண்டும். நிலக்கடலை சாகுபடியில் அதிக இடுபொருள் செலவாக இருப்பது விதையே.

எனவே நல்ல தரமான சான்று பெற்ற விதையைத் தேர்வு செய்வது மிகவும் அவசியம். தரமான விதைகளைத் தேர்வு செய்து விதைப்பு செய்யும்போது ஏக்கருக்கு 1 லட்சத்து 33 ஆயிரத்து 3 செடிகள் என்ற பயிர் எண்ணிக்கையைப் பராமரித்து உயர் விளைச்சல் பெறலாம்.

நிலக்கடலை விதையின் எண்ணெய் உள்ளடக்கம் காரணமாக அதன் முளைப்பு திறன் வேகமாக சரியும். எனவே நிலக்கடலையில் அதிக மகசூல் பெற உயிருள்ள விதைகளை பிரித்தெடுத்து தரமான விதைகளை விதைப்பது அத்தியாவசியமாகிறது. கடலை விதை ரகங்களின் குணங்களையும், தரங்களையும் அறிந்த விவசாயிகள் கடலை விதைகளின் முளைப்புத்திறனை அதிகமாக்கவும், அவை விரைவில் முளைத்து தேவையான பயிர் எண்ணிக்கையைப் பெற, விதைகளை முளைகட்டி விதைத்தல் முறையை கடைபிடிக்கலாம். இந்த நுட்பம் உயிருள்ள விதைகளை இறந்த விதைகளில் இருந்து பிரித்தெடுக்க பயன்படுகிறது.

நிலக்கடலை பருப்பில் நன்கு முற்றாத உடைந்த சுருங்கிய மற்றும் நோய் தாக்கிய சிறிய விதைகளை முதலில் பிரித்தெடுக்க வேண்டும். ஒரு கிலோ விதைக்கு ½ லிட்டர் என்ற அளவில் 0.5 சத கால்சியம் குளோரைடு உப்பு கரைசலில் 6 மணி நேரம் ஊறவைக்க வேண்டும். ஒரு ஏக்கர் விதைக்கு (50-55 கிலோ விதைப் பருப்பு) தேவையான 0.5 சத கரைசல் தயார் செய்ய 125 கிராம் கால்சியம் குளோரைடு என்ற இரசாயன உப்பை 25 லிட்டர் நீரில் கரைக்க வேண்டும்.

பிறகு ஊறவைத்த விதைகளை இரண்டு ஈர சாக்குகளுக்கிடையே மெல்லியதாக பரப்பி 16 மணி நேரம் இருட்டில் மூட்டம் வைக்க வேண்டும். இந்த சமயத்தில் உயிருள்ள விதைகளிலிருந்து சுமார் 5 மி.மீ அளவு முளைக்குருத்து வெளிவந்து விடும். முளைக்குருத்து வெளிவந்த விதைகளை தனியே பிரித்தெடுத்து நிழலில் உலர்த்த வேண்டும். இவ்வாறு 2 மணி நேரத்திற்கு ஒரு முறை முளைவிட்ட விதைகளை 3 முறை பிரித்தெடுத்து நிழலில் உலர்த்த வேண்டும். கடைசியில் முளைவராத விதைகளை இறந்த விதைகளாகும். இவ்வாறு விதைகளை பிரித்தெடுத்தல் மூலம் 10 முதல் 15 சதம் கூடுதலாக விளைச்சலைப் பெறமுடியும்.




இவ்வாறு நல்ல தரமான முளைப்பு திறனுடைய விதைகளைத் தேர்வு செய்த விதைப்புக்கு பயன்படுத்துவது நன்மை தரும். எனவே விவசாயிகள் தங்கள் கையிருப்பில் உள்ள விதை குவியலிலிருந்து 500 கிராம் அளவுக்கு விதை மாதிரி எடுத்து தமிழக அரசின் விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்புத் துறையின் கீழ் இயங்கும், மதுரை நாகமலைப் புதுக்கோட்டையில் உள்ள விதைப்பரிசோதனை நிலையத்தில் விதை மாதிரி ஒன்றிற்கு ரூ.80/- செலுத்தி விதைப்பரிசோதனை செய்து பயன்பெறலாம் என விதைப்பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி, வேளாண்மை அலுவலர்கள் சி.கமலாராணி மற்றும் பெரி.இராமலெட்சுமி தெரிவிக்கின்றனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**